

ஸ்ரீ:

ஆழ்வார் எம்பெருமானார் தேசிகன் திருவடிகளே சரணம்

முதலாயிரம்

# பெரியாழ்வார் திருமொழி

## முதல்பத்து

---

## 8-ஆம் திருமொழி - தொடர்சங்கிலிகை

______*_______

* தொடர்சங்கிலிகைசலார்பிலாரென்னத் தூங்குபொன்மணியொலிப்ப *
படுமும்மதப்புனல்சேர வாரணம்பையநின்றுஊர்வதுபோல் *
உடன்கூடிக்கிண்கிணியாரவாரிப்பு உடைமணிபறைகறங்க *
தடந்தாளிணைகொண்டுசார்ங்கபாணி தளர்நடைநடவானோ. (1)

செக்கரிடைநுனிக்கொம்பில்தோன்றும் சிறுபிறைமுளைப்போல் *
நக்கசெந்துவர்வாய்த்திண்ணைமீதே நளிர்வெண்பல்முளையிலக *
@ அக்குவடமுடுத்துஆமைத்தாலிபூண்ட அனந்தசயனன் *
தக்கமாமணிவண்ணன்வாசுதேவன் தளர்நடைநடவானோ. (2)

மின்னுக்கொடியும்ஓர்வெண்திங்களும் சூழ்பரிவேடமுமாய் *
பின்னல்துலங்கும்அரசிலையும் பீதகச்சிற்றாடையொடும் *
மின்னல்பொலிந்ததோர்கார்முகில்போலக் கழுத்தினில்காறையொடும் *
தன்னில்பொலிந்தஇருடீகேசன் தளர்நடைநடவானோ. (3)

கன்னல்குடம் திறந்தாலொத்தூறிக் கணகணசிரித்துவந்து *
முன்வந்துநின்றுமுத்தம்தரும் என்முகில்வண்ணன்திருமார்வன் *
தன்னைப்பெற்றேற்குத்தன்வாயமுதம்தந்து என்னைத்தளிர்ப்பிக்கின்றான் * (4)
தன்னெற்றுமாற்றலர்தலைகள்மீதே தளர்நடைநடவானோ.

முன்னலேர்வெண்ணிப்பெருமலைக்குட்டன் மொடுமொடுவிரைந்தோட *
பின்னைத்தொடர்ந்ததோர்கருமலைக்குட்டன் பெயர்ந்தடியிடுவதுபோல் *
பன்னியுலகம்பரவியோவாப் புகழ்ப்பலதேவனென்னும் *
தன்நம்பியோடப்பின்கூடச்செல்வான் தளர்நடைநடவானோ. (5)

ஒருகாலில்சங்குஒருகாலில்சக்கரம் உள்ளடிபொறித்தமைந்த *
இருகாலும்கொண்டுஅங்கங்குஎழுதினாற்போல் இலச்சினைபடநடந்து *
பெருகாநின்றஇன்பவெள்ளத்தின்மேல் பின்னையும்பெய்துபெய்து *
கருகார்க்கடல்வண்ணன்காமர்தாதை தளர்நடைநடவானோ. (6)

படர்பங்கயமலர்வாய்நெகிழப் பனிபடுசிறுதுளிபோல *
இடங்கொண்டசெவ்வாயூறியூறி இற்றிற்றுவீழநின்று *
கடுஞ்சேக்கழுத்தின்மணிக்குரல்போல் உடைமணிகணகணென *
தடந்தாளிணைகொண்டுசார்ங்கபாணி தளர்நடைநடவானோ. (7)

பக்கம்கருஞ்சிறுப்பாறைமீதே அருவிகள்பகர்ந்தனைய *
அக்குவடமிழிந்தேறித்தாழ அணியல்குல்புடைபெயர *
மக்களுலகினில்பெய்தறியா மணிக்குழவியுருவின் *
தக்கமாமணிவண்ணன்வாசுதேவன் தளர்நடைநடவானோ. (8)

வெண்புழுதிமேல்பெய்துகொண்டளைந்ததோர் வழத்தின்கருங்கன்றுபோல்
தெண்புழுதியாடித்திரிவிக்கிரமன் சிறுபுகர்படவியர்த்து *
ஒண்போதலர்கமலசிறுக்காலுறைத்து ஒன்றும்நோவாமே *
தண்போதுகொண்டதவிசின்மீதே தளர்நடைநடவானோ. (9)

திரைநீர்ச்சந்திரமண்டலம்போல் செங்கண்மால்கேசவன்தன் *
திருநீர்முகத்துத்துலங்குசுட்டி திகழ்ந்தெங்கும்புடைபெயர *
பெருநீர்த்திரையெழுகங்கையிலும் பெரியதோர்தீர்த்தபலம்
தருநீர் சிறுச்சண்ணம்துள்ளம்சோரத் தளர்நடைநடவானோ. (10)

*ஆயர்குலத்தினில்வந்துதோன்றிய அஞ்சனவண்ணந்தன்னை *
தாயர்மகிழஒன்னார்தளரத் தளர்நடைநடந்தனை *
வேயர்புகழ்விட்டுசித்தன் சீரால்விரித்தனஉரைக்கவல்லார் *
மாயன்மணிவண்ணன்தாள்பணியும் மக்களைப்பெறுவர்களே. (11)

அடிவரவு : தொடர் செக்கர் மின்னுக் கன்னல் முன்னம் ஒருகால் படர் பக்கம் வெண் திரை ஆயர் பொன்.